செ.வெ.எண்-10 நாள்-03.09.2021

# பத்திரிக்கைச் செய்தி

விவசாயிகள் தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடி செய்யும் போது எதிர்பாரத காலநிலை மாற்றங்களால் இழப்பு ஏற்படுகிறது. அந்த காலக்கட்டங்களில் விசாயிகளுக்கு ஏற்படும் நஷ்டங்களை திருத்தியமைக்கப்பட்ட பிரதம மந்திரியின் பயிர் காப்பீடு செய்வதன் மூலம் தவிர்க்கலாம்.

அரியலூர் மாவட்டத்தில் அரியலூர், திருமானூர் மற்றும் தா.பழூர் வட்டாரங்களில் தற்போது 2021 காரீப் பருவத்தில் சாகுபடி செய்யும் வாழை, மரவள்ளி பயிர்களுக்கு பயிர் காப்பீடு செய்ய அரசால் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, வரும் 2021 செப்டம்பர் மாதம் 15ம் தேதிக்குள் வாழை பயிருக்கு ஏக்கருக்கு ரூ3237/- மரவள்ளி பயிருக்கு ஏக்கருக்கு ரூ.1527/- அரியலூர் மாவட்டத்தில் உள்ள பொது சேவை மையம், தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கம் அல்லது தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் காப்பீடு கட்டணம் செலுத்தலாம். எனவே விவசாயிகள் பயிர்காப்பீடு திட்டத்தின் மூலம் காப்பீடு செய்து கால நிலை மாற்றங்களால் ஏற்படும் நஷ்டங்களை தவிர்க்க வேண்டும். விவசாயிகளுக்கு ஏற்படும் சந்தேகங்களுக்கு சம்மந்தப்பட்ட வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர்கள் அரியலூர்-9965880362, திருமானூர்- 8760531338, தா.பழூர்- 9943841155 ஆகிய தொலைபேசி எண்களை தொடர்பு கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.பெ.ரமண சரஸ்வதி, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**